ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

குறள் முழக்கம்



திருவள்ளுவர் ஆண்டு-2056 மார்கழி-24 பொ.ஆ.202-சனவரி 8

உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகம் வெளியிடும் இலவச இணையத் திங்களிதழ்

இந்தியாவின் அரசியலமைப்புச் சிந்தனையுடன் திருக்குறள்: மும்பையில் ஒரு கருத்துப் பரிமாற்றத் தருணம்:

பேரருளாளர் முனைவர் J இரவிக்குமார் ஸ்டீபன் G.

நிறுவனர்,

உலகுக்குத் திருக்குறள் இயக்கம்



வட இந்திய மக்களிடையே திருக்குறளை அறிமுகமும் செய்து திருக்குறளின் நன்நெறிகளைப் பரவச் செய்ய வேண்டும் என்ற தொடர்ச்சியான முயற்சியின் ஒரு பகுதியாக, 4 சனவரி 2026 அன்று மும்பையில் நடைபெற்ற ஒரு நிகழ்வில், அதன் மொழி-மாற்ற நூல்களை வழங்கும் பெருமை எனக்கு கிடைத்தது.
இந்நிகழ்வின் போது, ‘திருக்குறள்’ மொழி-மாற்றம் செய்யப்பட்ட பிரதிகளை முனைவர் S N சாஹூ (முதல் படம்) மற்றும் மாண்புமிகு நீதியரசர் முனைவர்

யஷ்வந்த் சவாரே (இரண்டாம் படம்) ஆகியோருக்கு நான் வழங்கினேன்.



முனைவர் S N சாஹு அவர்கள், புகழ்பெற்ற இந்திய எழுத்தாளர், அரசியல் விமர்சகர் மற்றும் இந்திய அரசின் முன்னாள் குடிமைப் பணியாளர் ஆவார். இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் அவர்களின் செய்தித் தொடர்புச் செயலாளராக (OSD) பணியாற்றியதாலும், பின்னர் பிரதமர் அலுவலகத்தில் இயக்குநராக (2004–2009) பணியாற்றியதாலும் பரவலாக அறியப்படுகிறார். ஒரு சிறந்த பொது அறிவு மிகுந்த ஆளுமை, இந்திய அரசியல், அரசியலமைப்புச் சட்ட ஆட்சி, வரலாறு மற்றும் விடுதலைப் போராட்டம் தொடர்பான கட்டுரைகளை The Wire, NewsClick, The Leaflet போன்ற ஊடகங்களில் அவர் தொடர்ந்து எழுதி வருகிறார். மேலும், ஒடிசா மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினராக, மக்கள் சபையின் செயலாளராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

மாண்புமிகு நீதியரசர் முனைவர் யஷ்வந்த் சவாரே அவர்கள், ஓய்வு பெற்ற நீதியரசரும், குறிப்பிடத்தக்க கல்வியாளரும் ஆவார். இந்தியாவில் அரசியலமைப்புச் சட்டம், சாதி அடிப்படையிலான பாகுபாடு மற்றும் சட்ட வரலாறு ஆகிய துறைகளில் அவர் வழங்கிய ஆய்வுப் பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கவை. கல்வி நிறுவனங்களில் அரசியலமைப்புச் நெறிமுறை (Constitutional Morality) வலுப்பெற வேண்டுமென வலியுறுத்தி வரும் அவர், கல்வி நிறுவனங்களில் நிலவும் சாதி அடிப்படையிலான பாகுபாடு பிறரை தொடர்ச்சியாக புறக்கணித்தலை உருவாக்குகிறது எனக் கூறுகிறார். அத்துமீறல் தடுப்பு சட்டம், 2015 உள்ளிட்ட நடப்பு சட்டங்களில் 'கல்வித் துறை'-யில் சாதி பாகுபாட்டைத் தடுக்கும் “சாதி அடிப்படையிலான அத்துமீறல்” குறித்த

தெளிவான வரையறை இல்லாததால் தனிச்சட்டங்கள் தேவை எனவும் கோரியுள்ளார்.

முனைவர் S N சாஹு' அவர்கள் முன்னதாக முனைவர் A P J அப்துல் கலாம் அவர்களுடன் நெருக்கமாக பணியாற்றியவர். அதன் வாயிலாக அவர் திருக்குறள் பற்றி அறிந்திருந்ததோடு, அதன் ஆங்கில மொழிபெயர்ப்புப் பிரதியையும் ஏற்கனவே வைத்திருக்கிறார். ஒடியா மொழி-மாற்ற நூலை' பெற்றபோது அவர் பின்வருமாறு மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்:

“ மிக்க நன்றி. திருக்குறளின் ஒடியா பிரதியைப் பெறுவது எனக்கு பெருமையாக உள்ளது. நாளை முதலே இதைப் படிக்கத் தொடங்குவேன். இந்த மதிப்புமிக்க நூலை வழங்கியதற்கு மீண்டும் ஒருமுறை நன்றி.”

இதற்கு மாறாக, 'மாண்புமிகு நீதியரசர் முனைவர் யஷ்வந்த் சவாரே' அவர்கள் முன்பு திருக்குறள் பற்றி அறிந்தவர் அல்ல. ஆகையால், அதன் காலத்தைக் கடந்த நெறி மற்றும் தத்துவ முக்கியத்துவங்களைப் பற்றி அவருக்கு விளக்க வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவர் திருக்குறள் நூலின் மராத்தி மொழி-மாற்ற நூலைப் பெற்றுக் கொண்டு, அதனை மிகுந்த மதிப்புடன் போற்றினார்.

பொதுமக்களிடமும், அறிவு நிறைந்த ஆளுமை வட்டங்களிடமும் குறிப்பிடத்தக்க செல்வாக்கு கொண்ட இத்தகைய நபர்களுக்கு. திருக்குறள் பிரதிகளை வழங்கியதில் நான் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.

– பேரருளாளர் முனைவர் J இரவிக்குமார் ஸ்டீபன் G.

பேரருளாளர் முனைவர் J இரவிக்குமார் ஸ்டீபன் அவர்களின் குறள் பரப்பும் பணியைக் குறள்முழக்கம் மனமார வாழ்த்துகிறது.மேலும் அவரது குறள் பரப்புரைப் பணி பற்றி விரிவாக அடுத்த இதழில் எழுதுமாறும் வேண்டுகிறது.உலகெங்கும் இத்தகைய நன்முயற்சிகளை ஒருங்கிணைப்பதே நம் நோக்கம்.சென்ற இதழில் மலேசியத் திருக்குறள் ஆய்விருக்கை குறித்துக் கண்டோம்.இந்த இதழில் மும்பை.இனி அடுத்தடுத்து உலகெங்கும்!

குறட் கடலிற் சில துளிகள்

இலக்குவனார் திருவள்ளுவன்

நல்லினத்துடன் சேர்ந்து நல்லறிவுடன் திகழ்!

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு

இனத்தியல்ப தாகும் அறிவு. (திருவள்ளுவர், திருக்குறள்,சாஈருடுஉ – 452)

பொழிப்புரை: தான் அடைந்த நிலத்தினது தன்மையால் நீரினது தன்மை வேறுபட்டு அந்நிலத்தின் தன்மையை உடையதாகும். அது போல மக்கட்குத் தாம் அடைந்த கூட்டத்தினது தன்மையைப் பொறுத்து அறிவு உண்டாகும் (பேரா.முனைவர் சி.இலக்குவனார்)

பதவுரை: நிலத்து-பூமியினது; இயல்பான்-தன்மையால்; நீர்-நீர்; திரிந்து-வேறுபட்டு; அற்று ஆகும்-அத்தன்மைத்து ஆகும்; மாந்தர்க்கு-மக்களுக்கு; இனத்து-இனத்தினது; இயல்பு-தன்மை; அது-அஃது; ஆகும்-ஆம்; அறிவு-அறிவு.

இனம் என்பதற்கு வகை வகுப்பு, குலம், சுற்றம், கூட்டம், இனம், ஒப்பு, அமைச்சர் எனப் பல பொருள்கள் உள்ளன.

நிலத்தின் தன்மையால், அதிற் சேரும் நீரின் தன்மை மாறுபடும். எந்த மண்ணில் நீர் கலக்கிறதோ அந்த மண்ணின் தன்மை நீருக்கு வரும். மண்ணின் நிறம், சுவை, பண்பு முதலியன நீருக்கும் உண்டாகும். நல்ல சுவையுள்ள நீர், கூடச் சேரும் மண்ணின் சுவைக்கேற்ப திரியும். நிறமற்ற நீர் செம்மண்ணில் கலக்கும் பொழுது செந்நிறம் அடைவதுபோல், கரிசல் மண்ணில் கலக்கும் பொழுது கரு நிறம் அடைவதுபோல், கலக்கும் மண்ணின் நிறத்திற்கேற்ப நிறத்தை அடைகிறது. உவர் நீரில் கலக்கும்போது உவர்ப்புச் சுவை அடைவதுபோல் சுவையற்ற நீர், தான் கலக்கும் மண்ணிற்கேற்பச் சுவையைப் பெற்று விடுகிறது.

இவைபோல்தான் மாந்தர்க்கும் அவரவர் சேர்ந்த இனத்தின் தன்மைப்படியே அறிவும் விளங்கும்; எந்த இனத்துடன் அல்லது கூட்டத்தினருடன் சேர்கிறானோ அந்த இனத்தின் அல்லது கூட்டத்தின் தன்மைக்கேற்ப அறிவைப் பெற்று விடுகிறான். நல்ல இனத்தில் சேருபவன் அறிவு நல்லறிவாவதுபோல் தீய இனத்தில் சேருபவன் அறிவு தீய அறிவாகிறது.

பின்னர் வந்த ஔவையார், சேரத்தக்கவர்களை நன்கு அறிந்து சேர வேண்டும் என்பதற்காகச்,

''சேரிடம் அறிந்து சேர்'' என்றதும் இதனால்தான்.

இக்காலக் கவியரசர் முடியரசன், நல்லவரைச் சார்ந்தால் நல்லவர் ஆகலாம், அல்லவரைச் சார்ந்தால் அல்லவர் ஆகலாம். சேரிடம் அறிந்து சேராவிடில் சீரழிவாகிச் சிறுமை அடைவான் என்கிறார். இதனை அவர் கூறும் பாடல் வரிகள் பின்வருமாறு:

நல்லவர்ச் சார்வோர் நல்லோ ராகுப
அல்லவர்ச் சார்வோர் அல்லரா குபவே;
சேரிடன் அறிந்து சேர்க இன்றேல்
சீரழி வாகிச் சிறுமை மிகுமே!
(நெஞ்சில் பூத்தவை)

என்கிறார் கவியரசர் முடியரசன்.

தேனுடன் பாலைக் கலக்கும் பொழுது, பாலுக்குத் தேனின் சுவை வந்து விடுகிறது. அதே நேரம், பாலுடன் தண்ணீரைக் கலந்தால் பாலின் சுவை குறைந்து விடும். அதன் தன்மையும் மாறுபடும். எந்தப் பொருளுடனும் கலப்படம் செய்யும் பொழுது அந்தப் பொருள் தன் தன்மையை இழந்து கேடு செய்யும் பொருளாகிறது. எனவேதான் கலப்படப் பொருளை யாவரும் விரும்புவதிலலை.

நிலத்தோடு கலக்கும் நீர் அதன் தன்மைக்கேற்ப திரிவதுபோல் எப்பொருளாயினும் தன்னுடன் கலக்கும் பொருளால் நல்ல தன்மையை இழந்து விடுகிறது. மாந்தரும் தாம் சேரும் இனத்திற்கேற்ப அறிவு சிதைந்து மாறி விடுகின்றனர். அறிவு சிதையாமல் நல்லறிவுடன் இருக்க வேண்டுமென்றால், நல்லினத்துடன் சேர வேண்டும்.

அறிவு வரவிருக்கும் துன்பங்களைத் தவிர்க்கிறது; சரியான முடிவுகளை எடுக்க உதவுகிறது; வாழ்க்கையின் உண்மையான இயல்பைப் புரிந்துகொள்ளச் செய்கிறது; தன்னம்பிக்கையை மிகுவிக்கிறது; குழப்பத்தைத் தவிர்த்து தெளிவுடன் செயல்பட வழிகாட்டுகிறது; அறிவுடையவர் எல்லாம் உடையவராகத் திகழ்கிறார். இவற்றிற்காக அறிவு சிதையாமல் இருக்க வேண்டும்; நல்லறிவாக இருக்க வேண்டும்.

எனவே, நல்லினத்துடன் சேர்ந்து நல்லறிவுடன் திகழ்வோம்!

வள்ளுவம் .. வள்ளுவம்.. வள்ளுவம்.
ஆற்ற வேண்டிய பணிகள்

பழைமை அகதிகளின் பிடியிலிருந்தும், ஆதிக்கவாசிகள் அட்டூழியங்கள் நிறைந்த வழியிலிருந்தும் சிறை மீண்ட திருக்குறளின் வரலாற்றில் கீழ்வானம் சிவந்து கிழக்கு வெளுத்தது.

ஒளிப்பிழம்பாய் உதித்தெழுந்து திருக்குறட் சூரியனின் உன்னதமான பயணமும் தொடங்கியது.

ஆரவாரமான விழாக்களும், ஆர்ப்பாட்டமான வரவேற்புகளும், அழகான பதிப்புக்களும், ஆய்வேடுகளும் அய்யன் திருவள்ளுவனின் காலடித் தாமரைகளில் காணிக்கை ஆக்கப்பட்டன.

நெருப்பாற்றுச் சோதனைகளை நீந்திக் கடந்து வந்த வள்ளுவனுக்கு இது பொற்காலம் என்றும், புகழ்க்காலம் என்றும் பேசப்படுகிறது.

இருக்கட்டும்! பொற்காலம் என்ற புகழ்மாலைகள் உண்மையானதாகவே இருக்கட்டும்! திருக்குறளைப் புகை சூழ்ந்தது போலப் புகழ் சூழ்ந்திருக்கும் இந்த வேளையில், எல்லோருமே அந்தப் புகழ்மாலை மணத்தில் ஆழ்ந்து தாழ்ந்து போய்விடாமல் அறிவுபூர்வமாகச் சிந்தித்திருப்பது நல்லது.

ஏனெனில் திருக்குறளுக்கு நாம் செய்திருப்பதும் செய்திருக்க வேண்டியதுமான அடிப்படைப் பணிகளைப் பற்றிச் சிந்தித்துத் தெளிவுபெறுவதற்கு இது ஏற்ற தருணம்.

திருக்குறளைப்பற்றி நாம் நிறையவே பேசியும், எழுதியும் தீர்ந்துவிட்டோம். எழுதியதில் நிலையானதும், அடிப்படையானதும், அவசியமானதுமான படைப்புக்களைத் தேடித் தேடித்தான் கண்டறிய வேண்டி உள்ளது.

எண்ணிக்கை மிகுதி! தரம் குறைவு! திருக்குறள் வயல் வெளியில் ஏர்பூட்டி உழுத பலரும் அகல உழுதவர்களே! ஆழ உழுதவர்கள் ஒரு சிலர் மட்டுமே! திருக்குறளின் அழகில் மயங்கியவர் பலர் என்றாலும் அதன் செய்தி அறிந்தவர் சிலர்தான்.

திருக்குறளின் உள்ளும் புறமும், அகலமும் ஆழமும், வெளிப்படும்படியும். தெளிவுபடும்படியும் அதன் சகல பரிமாணங்களும் புலப்படும்படியுமான படைப்புக்களைக் கொண்டுவர வேண்டும்.

வள்ளுவம் இதழ் 9
தலையங்கம்
பல்லடம் மாணிக்கம்
இ .சுந்தரமூர்த்தி
ச. மெய்யப்பன்

தொகுப்பு
சி இராஜேந்திரன்
வள்ளுவர் குரல் குடும்பம்
www.voiceofvalluvar.org

குடும்பத்துடன் குறளங்காடி செல்வோம்!

நூல்களையும் குறுவட்டுகளையும் வாங்குவோம்.

எங்கும் குறள்மணம் கமழ்க.